# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2007 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க, சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்புக் கலைக்கழக (திருத்தச்) சட்டம்

---

*(2007 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2007, ஒற்றோபர் மாதம் 26 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

---

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை : ரூபா 8.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

## 2007 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க, சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்புக் கலைக்கழக (திருத்தச்) சட்டம்

[2007 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஓ. 53/2006

## 1981 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க, சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்புக் கலைக்கழகச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

*சுருக்கப்பெயர்.*

**1.** இச்சட்டம், 2007 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க, சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்புக் கலைக்கழக (திருத்தம்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*1981 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

**2.** இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும் 1981 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க, சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்புக் கலைக்கழகச் சட்டத்தின் 2 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவினை நீக்கி அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவினை இடுவதன் மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது :—

> "(1) இதனகத்துப்பின்னர் "பல்கலைக்கழகம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும் "சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்புப் பல்கலைக்கழகம்" என அழைக்கப்படும் பல்கலைக்கழகம் ஒன்று தாபிக்கப்பட வேண்டும்.".

*"ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்புக் கலைக்கழகம்" ஆனது ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்புப் பல்கலைக்கழகம் என அறியப்படுதல் வேண்டும்.*

**3.** (1) முதன்மைச் சட்டவாக்கத்திலும் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்திலும் "சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்புக் கலைக்கழகம்" என்ற சொற்கள் எந்த இடங்களிலெல்லாம் காணப்படுகின்றனவோ அந்த இடங்களிலெல்லாம் "ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்புப் பல்கலைக்கழகம்" என்ற சொற்கள் இடப்படுதல் வேண்டும்.

(2) ஏதேனும் அறிவித்தலில், அறிவிப்பில், ஒப்பந்தத்தில், கடிதத்தொடர்பில் அல்லது வேறு ஆவணத்தில் "சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்புக் கலைக்கழகம்" என்ற குறிப்பீடு ஒவ்வொன்றும் "ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்புப் பல்கலைக்கழகம்" என்ற குறிப்பீடொன்றாக வாசிக்கப்பட்டுப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

*ஐயங்களைத் தவிர்த்தல்.*

**4.** ஐயங்களைத் தவிர்ப்பதற்காக, இச்சட்டத்தினால் தாபிக் கப்பட்ட "ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்புப் பல்கலைக்கழகம்" ஆனது எல்லா நோக்கங்களுக்காகவும் முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவினால் தாபிக்கப்பட்ட "சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்புக் கலைக் கழகத்தினை அடுத்துறுவதாகக் கருதப்படல் வேண்டும் என இத்தால் வெளிப்படுத்துகின்றது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**5.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்